# OUTSTANDING YOUNG PERSON

# 1990




ஈரோடு காவேரி ஜூனியர் சேம்பர் சார்பில் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு 1989 – 90 ஆம் ஆண்டிற்கான 'OUTSTANDING YOUNG PERSON' விருது ஈரோடு ராணா திருமண மண்டபத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் வழங்கப்பட்டது.

கல்லூரி மாணவர் பேரவைத் தலைவர் பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றியது, பெரியார் மாவட்ட அனைத்துக் கல்லூரி மணவர் தலைவர் பொறுப்பை முறையாகச் செயல்படுத்தியது, மாநில அளவில் மாணவர் பெருமன்றத் தலைவராகப் பணியாற்றியது, மாணவராக இருந்தபோதே சமூக சேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது, இளமைப் பருவத்திலேயே தமிழகமெங்கும் சென்று நூற்றுக்கணக்கான மேடைகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியது போன்ற இவர் ஆற்றிய சமூகத்

தொண்டினைப் பாராட்டி இவ்விருது வழங்கப்படுவதாக ஜூனியர் சேம்பர் அமைப்பால் அறிவிக்கப்பட்டது.

இவ்விருதை ஜூனியர் சேம்பர் அமைப்பின் முன்னாள் அகில இந்தியத் தலைவர்- வழக்கறிஞர் கே. வல்லபதாஸ் அவர்கள் வழங்கினார். கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார் .